# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.99/2014

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலகிருஷ்ணன் | மதம் | : இந்து |
| த/பெ | : பெருமாள் | ஜாதி | : -- |
| வயது | : 46 | கிராமம் | : அம்மையார்குப்பம் |
| தொழில் | : நெசவு | வட்டம் | : திருத்தணி |

**17.10.2025**
**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் அம்மையார்குப்பமா என்றால் ஆமாம். தாவா சொத்து கிரையம் வாங்கிய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை யார் யாருக்கு விற்றார், யார் வாங்கினார் என்பது தெரியுமா என்றால் முருகேசன் வாங்கியுள்ளார். விற்றவர் மற்றும் கிரைய தேதி ஞாபகமில்லை. என்ன தொகைக்கு கிரையம் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புல எண், மனை எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 20 க்கு 70 ஆகும். மொத்தம் 2800 சதுரடியில் அவர் எந்த பக்கம் கிரையம் வாங்கினார் என்றால் தெற்கே கிரையம் வாங்கியுள்ளார்.

2. வாதி வீடு கட்டும்போது நான் மேற்பார்வை செய்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதில் வாதி எனக்கு உறவினரா என்றால் நான் பக்கத்து தெருவில் உள்ளேன். நான் கட்டிட மேற்பார்வையளராக அல்லது ஒப்பந்ததாரராக அல்லது மேஸ்திரியாக பணி செய்கிறேனா என்றால் இல்லை. நான் வீடு கட்டியதை கண்காணித்தேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தறி வேலை செய்கிறேன். நான் கட்டிடத்தை மேற்பார்வை பார்த்ததற்கு எனக்கு சம்பளம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். என்ன தொகை சம்பளமாக கொடுத்தார்கள் என்றால் ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- கொடுத்தார்கள். அவ்வாறு ஒரு மாதத்திற்கு

ரூ.10,000/— கொடுத்ததற்கு ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை.

3. வீடு கட்டுவதற்கு முன்பு நில அளவை செய்தார்களா என்றால் நில அளவை செய்தார்களா இல்லையா என்பதை நான் பார்க்கவில்லை. எனவே எனக்கு அது தெரியாது. வழக்கு சொத்தின் நான்கு எல்லை தெரியுமா என்றால் தெற்கே மாசிலாமணி வீடு, வடக்கே சிதம்பரம் காலி மனை, கிழக்கே திருவள்ளுவர் தெரு, மேற்கே சுந்தரவர்தலுவின் மாந்தோப்பு உள்ளது. வழக்கு சொத்திற்கும் மாசிலாமணி வீட்டிற்கும் இடையே காலியிடம் உள்ளதா என்றால் இல்லை. மனை எண்.3க்கும், 4க்கும் இடையே 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான காலி மனை உள்ளது என்றால் இல்லை. அந்த காலி மனையை முறையாக சந்தோஷ் நிலஅளவை செய்து காண்பித்துள்ளார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)